**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 113 /2018

.வா.சா2 குருபாக்கியலட்சுமி

| | | |
|---|---|---|
| Name | : | குருபாக்கியலட்சுமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 28.10.2025 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது வீ.கே புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில வட்ட துணை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. வீரகேரளம்புதூர் ஊத்துமலை கிராம நிர்வாக அலுவலர் புல எண். 73 க்கு உட்பிரிவு செய்வதற்கு முன்னர் புலவரைபடம் கொடுத்துள்ளார். அந்த புலவரைபடத்தில் உட்பிரிவுகள் 1 ஏ, 1 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 2006 ம் ஆண்டு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் புல எண்.73 ல் 1 ஏக்கு தங்கத்துரை மனைவி ஜெபகனி, யோகேப்பு தேவர் மகன் சின்ன அந்தோணி தேவர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. புல எண்.73 ல் 1 ஏ-க்கு 47 ஏர்ஸ் என சொல்லப்பட்டுள்ளது. புல எண் 73 ஐ உட்பிரிவு செய்ய கோரி சின்னஅந்தோணி தேவர் மகள் மைக்கேல் அம்மாள் 3.1.17 ம் தேதியில் மனு கொடுத்துள்ளார். அந்த மனுவோடு 5.10.2016 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம், ஆதார் கார்டு ஆகியவை இணைக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. அந்த மனுவோடு வில்லங்கசான்று கொடுக்கப்பட்டதா என்பது பற்றி தெரிய வில்லை. நான் கொண்டு வந்துள்ள ஆவணங்களில் வில்லங்கசான்று இல்லை. நாங்கள் அந்த வில்லங்க சான்றிதழை கணிணியில் 27.10.2025 ம் தேதி

பதிவிறக்கம் செய்து கொண்டு வந்துள்ளேன். உட்பிரிவு செய்யப்பட்ட உத்தரவு கணினியில் இருந்ததை பதிவிறக்கம் செய்து கொண்டு வந்துள்ளேன். உட்பிரிவு செய்யும் போது ஜெபகனி அம்மாள் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. ஏற்பாடு ஆவணத்தின் அடிப்படையில் புல எண். 73/1 ஏ 2–க்கு சின்ன அந்தோணி தேவர் மகள் மைக்கேல் அம்மாள் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. புலஎண் 73 ல் உள்ள புலவரைபடத்தில் புல எண்.73/1 ஏ 2–க்கு தென்டவடல் 33 மீட்டர் உள்ளது. புல எண். 73/1 ஏ 2 ன் மொத்த பரப்பு 23.5 ஏர்ஸ் ஆகும். புல எண். 73/1 ஏ 1 ன் மொத்த பரப்பு 23.5 ஏர்ஸ் ஆகும். 21.12.2016 தேதியிட்ட சீர்திருத்தல் ஆவணத்தை சேர்த்து எங்களது அலுவலகத்தில் எந்த ஒரு மனுவும் கொடுத்ததாக தெரியவில்லை. இணையத்தில் இருந்து ஆவணங்களை நான் பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன். 9.1.17 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு மற்றும் பட்டாக்கள் அதன் இணைந்த ஆவணங்கள் மூ.த.சா.ஆ 1. ஆகும். புல எண். 73 க்கு கொடுக்கப்பட்ட புலவரைபடம் மூ.த.சா.ஆ 2 ஆகும். புல எண்.73 க்கு உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்னர் ஊத்துமலை கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புலவரைபடம் நகல் மூ.த.சா.ஆ 3 ஆகும். பட்டா எண்.1543 க்கு கொடுக்கப்பட்ட சிட்டா நகல் மூ.த.சா.ஆ 4 ஆகும்.

4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

மூ.த.சா.ஆ 1 ல் மனுசெய்த நபர் மைக்கேல் அம்மாள் என்று மனு நாள் 3.1.2017 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கொடுத்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனுவை தாக்கல் செய்தால் தான் என்னென்ன இணைப்புகள் இருந்தது என்பது தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்று தற்போது பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூ.த.சா.ஆ 1 ல் இணைப்பு செய்துள்ள ஆவண எண். 1948/2016 என்ற ஆவணமானது கடந்த

21.12.2016 ல் மற்றொரு ஆவண எண். 2403/2016 என்ற பிழை திருத்தல் ஆவணத்தின் மூலமாக பரப்பளவு மாற்றம் செய்துள்ளதாக வில்லங்க சான்றிதழில் பதிவுகள் உள்ளது என்றால் உள்ளது. நாங்கள் உட்பிரிவு செய்யும்போது சொத்து சார்ந்த ஆவணங்கள், வில்லங்க சான்று ஆகியவற்றை பார்வையிட்டு தான் உட்பிரிவு செய்வோம் என்றால் சரிதான். புல எண். 73/1 ஏ 2 என்பது 23.5 ஏர்ஸ் என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிழை திருத்தல் ஆவணத்தின்படி 68.5 செண்டாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் உட்பிரிவானது 58 செண்ட் மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உட்பிரிவு நடவடிக்கைக்கு வட்டாட்சியர் தான் ஆணை பிறப்பிப்பார் என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்வதற்கு காரணகாரிய உத்தரவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சீர்திருத்த ஆவணத்தின்படி உட்பிரிவை கூடுதலாக பரபளவில் சேர்க்கப்பட்டதாக எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். இது சம்பந்தமான பிரச்சனையை நீதிமன்றம் தான் முடிவுசெய்ய வேண்டும் என்றால் சரிதான்.

(இந்த குறுக்குவிசாரணையை 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.